**23.10.2025**

STC.No. 191/2024 சண்முகம் த/பெ. சுப்ரமணியன் PW1

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

06.01.2024 அன்று நான் எங்கு இருந்தேன் என்றால் நான் காமராஜர் நகரில் உள்ள எனது வீட்டில் இருந்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள முகவரியில் உள்ள வீடு யாருடையது என்றால் என்னுடையது. என்னுடைய ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகிய ஆவணங்களில் எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள முகவரி தான் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எதிரி 06.01.2024 அன்று நான் இலால்குடியில் உள்ள வீட்டில் இருக்கும் போது தான் கடன் கேட்டார் என சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் பல்லபுரம் வீட்டில் நான் இருக்கும் போது தான் கடன் கேட்டார் என சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு பேங்க் ஆஃப் பரோடா வங்கி, இலால்குடி கிளையில் வைத்து தான் கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிக்கு கொடுத்ததாக கூறப்படும் ரூ.500000/– பணத்தையும் பேங்க் ஆஃப் பரோடா வங்கி, இலால்குடி கிளையில் இருந்து தான் எடுத்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. ரூ.300000/– பணம் வீட்டில் இருந்து எடுத்து வந்தேன். ரூ.200000/– பணம் பேங்க் ஆஃப் பரோடா வங்கி, இலால்குடி கிளையில் இருந்து எடுத்து கொடுத்தேன். நான் மேற்சொன்ன விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ, சத்திய பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் யார் உடன்

இருந்தார்கள் என்றால் அகலங்கநல்லூர் பழனி என்பவர் உடன் இருந்தார். வேறு யார் உடன் இருந்தார்கள் என்றால் எதிரியின் கணவரும் உடன் இருந்தார். நான் பணத்தை யாரிடம் கொடுத்தேன் என்றால் தேன்மொழி மற்றும் அவரது கணவர் குருநாதரிடம் கொடுத்தேன். எதிரியின் கணவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. பழனி என்பவர் மூலமாக தான் எனக்கு எதிரி மற்றும் அவரது கணவரை எனக்கு தெரியும். பழனி அறிமுகப்படுத்துவதற்கு முன்னால் எதிரி மற்றும் அவரது கணவரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி எப்போது வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார் என்றால் 14.01.2024 அன்று என்னிடம் கொடுத்தார். எதிரி என்னிடம் காசோலை கொடுத்த தேதியை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காசோலையை வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்வதற்கு முன்னால் எதிரியிடம் நீங்கள் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்கிறீர்களா அல்லது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யவா என கேட்டேனா என்றால் கேட்டேன். நான் TDCC வங்கியில் தாக்கல் செய்த காசோலையானது எந்த காரணத்தால் திருப்பப்பட்டது என்றால் வங்கியில் பணம் இல்லை என திருப்பப்பட்டது என வங்கியில் சொன்னார்கள். நான் வங்கியில் தாக்கல் செய்த காசோலையானது போதிய பணம் இல்லாத காரணத்தினால் திருப்பப்படவில்லை என்றாலும், நான் வழக்கற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் நான் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் எப்போதும் கடன் பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையானது எதிரியால் கையொப்பம் செய்யப்பட்டு என்னிடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை

என்றாலும் எதிரியின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னர் பழனி என்னிடம் வந்து எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை ஏன் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாய் என என்னிடம் கேட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கு காசோலைக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதால் தான் எதிரி எந்த பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.10.23 10:20:48 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி